26.07.2017

தினமணி

## பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தின்கீழ் ரூ.1454 கோடி விடுவிப்பு

தமிழகத்தில் பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இது வரை ரூ. 1,453.58 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

இதுகுறித்து, அமைச்சர் செல்லூர் கே.ராஜூ செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை: பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இப்போது பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை காப்பீட்டு நிறுவனங்களால் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. கடந்த 19-ஆம் தேதி வரையில் ரூ.1,453.58 கோடி இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

காப்பீட்டு நிறுவனங்களால் இழப்பீட்டுத் தொகை மேலும் விடுவிக்கப்பட உள்ளது. பயிர்க் காப்பீட்டு நிறுவனங்களால் விடுவிக்கப்படும் தொகை விவசாயிகளுக்கு ரொக்கமாக வழங்கப்படக் கூடாது எனவும், சேமிப்புக் கணக்கில் மட்டுமே வரவு வைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயல்பாடுகளைக் கண்காணிக்க துணைப் பதிவாளர் தலைமையில் பறக்கும்படை குழுக்களை அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தவறுகள் நடைபெற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 50 சென்ட் நிலத்தில் சம்பங்கி பூ: ஏக்கருக்கு ரூ.2 லட்சம் லாபம்



"பிள்ளை போல் வெள்ளை நிறத்தில் சிரிக்கும் சம்பங்கிப் பூக்கள் தான் என்னை ஜெயிக்க வைக்கிறது," என்கிறார், திண்டுக்கல் புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கலைசெல்வன். இரண்டு ஏக்கர் நிலம் இருந்தாலும் 50 சென்ட் பரப்பளவில் நில மூடாக்கு முறையில் சம்பங்கி பயிரிட்டுள்ளார். 2 முதல் 3 ஆண்டுகளுக்கு உயிர் தரும் இப்பயிரின் மகத்துவம் குறித்து கலைசெல்வன் கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு 150 கிலோ நில மூடாக்கு சீட் வேண்டும். இந்த சீட் கிலோ 230 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை செலவாகும். நீளப்பாய் போன்று இருக்கும் இதன் நடுவில் துளையிட்டு சம்பங்கி கிழங்கு நடவேண்டும். ஏக்கருக்கு 800 - 900 கிலோ கிழங்கு தேவைப்படும்.சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் 16 அடி இடைவெளியில் 'ஸ்பிரிங்ளர்' முறையில் தண்ணீரை தெளிக்கலாம்.15 நாட்களில் முளை வந்து விடும். 65 முதல் 90 நாட்களில் பூ வர ஆரம்பிக்கும்.

ஏக்கருக்குஅதிகபட்சமாக 60 கிலோ பூக்கள் கிடைக்கும். சூழ்நிலையைப் பொறுத்து 3 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சினால் போதும். 5 மாதங்களுக்கு பிறகு பூக்கள் தினமும் கிடைக்கும். காலை வேளையில் மார்க்கெட்டிற்கு பூ அனுப்புவது நல்லது.அதிகாலை 4:00 மணிக்கு பூ எடுக்கலாம். காலையில் பூக்கும் பூ வெள்ளையாக பளிச்சென்று இருக்கும். பூக்களை பறித்து தண்ணீரில் லேசாக நனைத்து கட்டி வைத்து திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு அனுப்புவேன். ஒரு நபர் ஒரு மணிநேரத்தில் 10 கிலோ பூக்கள் பறிக்கலாம். வைகாசி, ஆனியில் கிலோ 500 ரூபாய் வரை விலை கிடைக்கும். சீசன் இல்லாத நேரத்தில் கிலோ 20 ரூபாய் தான். ஆண்டுக்கு 52 முகூர்த்தங்கள் மூலம் லாபம் இருப்பதால், ஏக்கருக்கு சராசரியாக 2 லட்ச ரூபாய் லாபம் கிடைக்கும். என்றார். தொடர்புக்கு: **97877 87432**

**- எம்.எம்.ஜெயலெட்சுமி மதுரை.**

**பருத்தியை காயப்படுத்தும் அமெரிக்கன் காய்ப்புழு**

பருத்தி பயிரில் அமெரிக்கன் காய்ப்புழு எனும் பச்சைக் காய்ப்புழுவின் தாக்குதல் ஏற்பட்டுள்ளதா என விவசாயிகள் கண்காணிக்க வேண்டும். இத் தாக்குதலுக்கு உள்ளான பூ மொட்டுகள் விரிந்து பின்னர் விழுந்து விடும். பாதித்த பகுதிகளில் வட்ட வடிவமான துளை காணப்படும். துளைகள் எச்சத்தினால் அடைக்கப்படாமல் சுத்தமாக காணப்படும். துளையின் கீழ் உள்ள புல்லி வட்ட இதழ்களில் புழு வெளியேற்றிய கழிவுகளை காணலாம். தழைச்சத்து உரம் அதிகப்பட்டு செழித்து அடர்ந்து வளர்ந்த பயிரில் அமெரிக்கன் காய்ப்புழுத்தாக்குதல் அதிகமாக இருக்கும். அமெரிக்கன் காய்ப்புழுவினை கட்டுப்படுத்த புரோபினோபாஸ் (2 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீர்) அல்லது ஸ்பின்னோசாடு (0.5 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீர்) மருந்தினை பயன்படுத்தலாம். பயிரின் வளர்ச்சியினை பொறுத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை மருந்து கரைசல் தேவைப்படும். மருந்து கரைசல் பயிரில் நன்கு படிவதற்காக சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால் ஆகிய திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்து கலக்கி கொண்டு மாலை நேரத்தில் மருந்து தெளிக்கலாம்.

இதனால் புழு நல்ல முறையில் கட்டுப்படுவதோடு, நன்மை தரும் பூச்சிகள் பாதுகாக்கப்படும்.

**- முனைவர் ம.குணசேகரன்**

தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம்

ஸ்ரீவில்லிபுத்தூர்.

**நிரந்தர வேளாண் கலாசாரப் பண்ணை: விவசாயி பாமயனின் பன்முகம்**



மதுரையில் திருமங்கலம், டி.கல்லுப்பட்டி, கள்ளிக்குடி உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி மற்றும் சிறுதானியங்கள் சாகுபடி மானாவாரியாக நடக்கிறது. தண்ணீர் பஞ்சம் மிகுந்த இப்பகுதியில் விவசாயத்தில் சாதனை படைப்பது சாதாரண காரியமல்ல. தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உழைப்பை மூலதனமாக கொண்டு விவசாயத்தில் சாதனை படைத்து வருகிறார் இயற்கை விவசாயி பாமயன். திருமங்கலம் - டி.கல்லுப்பட்டி ரோட்டில் சோலைப்பட்டி விலக்கில் 'நிரந்த வேளாண் கலாச்சாரப் பண்ணை' (பெர்மனன்ட் அக்ரி கல்சர் பார்ம்) நடத்தி வருகிறார். இங்கு சுட்டெரிக்கும் வெயிலில் சொட்டு நீர் கூட உடனே ஆவியாகி விடும். உப்புச்சுவை மிக்க நீரில் இயற்கை விவசாயம் செய்வதற்காக

உப்புச்சுவையை இயற்கை முறையில் மாற்றி தினமும் பயன் படுத்துகிறார் பாமயன்.இது எப்படி சாத்தியம் என்பது குறித்து பாமயன் கூறியதாவது: நிரந்த வேளாண் கலாசாரப் பண்ணையை உருவாக்குவதற்காக 6 அடி ஆழம், 40 அடி அகலத்தில் மண் தொட்டி அமைத்தேன். அதில் பாலிதீன் பாய் விரித்து 194 லட்சம் லிட்டர் உப்பு நீர் தேக்கினேன். உப்புச்சுவை மற்றும் தண்ணீர் சத்துள்ளதாக (அமிலோ ஆசிட் வாட்டர்) மாற்றுவதற்காக தலா 400 எண்ணிக்கையில் ஜிலேபி கெண்டை, கட்லா, புது கெண்டை, விரால் மீன் குஞ்சுகளை தொட்டியில் விட்டுள்ளேன். மீன் குஞ்சுகளின் கழிவுகள் தண்ணீரை சத்துள்ளதாக மாற்றி விடுகிறது. அந்த தண்ணீரை வயல்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை பாய்ச்சுகிறேன். மீண்டும் தொட்டியில் தண்ணீர் நிரப்புகிறேன். தொட்டியில் இருந்து மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து மண் இல்லாத உணவு தானியங்கள் வளர்த்து வருகிறேன். தொட்டி அமைக்க 70 ஆயிரம் ரூபாய் செலவானது. அவரவர் வசதிக்கேற்ப குறைந்த செலவிலும் தொட்டி அமைக்கலாம். நிரந்தர வேளாண் கலாசாரப் பண்ணை என்பது மீன் கழிவு நீரில் விவசாயம், மாட்டுச்சாணத்தில் மண்புழு உரம், மீன்களுக்கு உணவாகும் மண்புழு, மீன் வளர்ப்பில் லாபம் என ஒருங்கிணைந்த இயற்கை விவசாயத்தை குறிக்கும் என்றார். தொடர்புக்கு **98420 48317.**

**- கா.சுப்பிரமணியன்,** மதுரை.

**தினகரன்**

**பரமத்திவேலூரில் மரவள்ளி கிழங்கு விலை உயர்வு**

பரமத்திவேலூரில் மரவள்ளிக்கிழங்கு டன்னுக்கு ரூ.3 ஆயிரம் விலை உயர்ந்து, ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவில் பெருங்குறிச்சி, சோழசிராமணி, உப்புப்பாளையம், சுள்ளிப்பாளையம், தி.கவுண்டம்பாளையம் கபிலர்மலை ஓலப்பாளையம்,

பெரியமருதூர், இருக்கூர், பரமத்தி, சிறுநல்லிக்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ளனர்.

இங்கு விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின்னாம்பள்ளி, கீரனூர், நாமகிரிப்பேட்டை, தொ.ஜேடர்பாளையம், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி மில்களுக்கு புரோக்கர்கள் மூலம் விற்பனை செய்கின்றனர். மரவள்ளிக்கிழங்கை (ஸ்டார்ச்) பாய்ண்ட் அடிப்படையில் வியாபாரிகள் வாங்குகின்றனர். பரமத்திவேலூரில், கடந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு ஒரு டன் ரூ.12 ஆயிரத்துக்கு விற்பனையானது. இந்த வாரம் டன்னுக்கு ரூ.3 ஆயிரம் விலை உயர்ந்து, ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனையானது.

**ராசிபுரத்தில் 1,583 மூட்டை பருத்தி ரூ.38 லட்சத்துக்கு ஏலம்**

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில், 1,583 மூட்டை பருத்தி, ரூ.38 லட்சத்துக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் அருகே அக்கரைப்பட்டியில், ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை செயல்பட்டு வருகிறது.

இங்கு வாரந்தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்றைய பருத்தி ஏலத்தில், பாலப்பட்டி, அக்கரைப்பட்டி, பொரசல்பட்டி, சௌதாபுரம், வெண்ணந்தூர், குருசாமிபாளையம், வையப்பமலை, மல்லசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், 1,583 மூட்டை சுரபி ரக பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

ஈரோடு, நாமக்கல், திருச்செங்கோடு, அவிநாசி, அன்னூர், ஆத்தூர், கொங்கணாபுரம், எடப்பாடி, மகுடஞ்சாவடி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஏலத்தில் சுரபி ரக பருத்தி

குவிண்டால் ஒன்று அதிகபட்சமாக ரூ.6,416க்கும், குறைந்தபட்சம் ரூ.6,612க்கும் விற்பனையானது. ஒட்டுமொத்தமாக ஏலத்தில் 1,583 மூட்டை பருத்தி, ரூ.38லட்சத்துக்கு விற்பனையானது.

## காய்ந்த இளம்சோள பயிரில் விஷத்தன்மை கால்நடைகளை பாதிக்கும் அபாயம்

காய்ந்த இளம் சோள தீவனப்பயிரில் விஷத்தன்மை இருக்கக்கூடும் என்பதால், அவை கால்நடைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கால்நடைதுறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் பெய்த மழையால், கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள் தங்கள் நிலங்களில் மானாவாரியாக சோளம் (தீவனப்பயிர்) கால்நடைகளுக்கு தீவனம் வேண்டி விளைவித்துள்ளனர்.

தற்போது மழையில்லாத காரணத்தால் சோளப்பயிர்கள் வாடியும், காய்ந்தும் உள்ளது. இந்த பயிர்களில் அதிக அளவு ஹைட்ரோசயனிக் அமிலம் நச்சு உள்ளது. இதை அதிகஅளவு உட்கொள்ளும் கால்நடைகள் ஹைட்ரோசயனிக் அமில நச்சுத்தன்மையினால் பாதிக்கப்பட்டு உடனே இறப்பு நேரிடும். கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்படும் தீவனப்பொருட்களை, மரவள்ளிக் கிழங்கு மற்றும் தீவனப்பயிர்களில் சோளம் கரும்புத்தோகை கருவேலம், வெவ்வேலம் வாகை போன்ற மர இலைகளிலும் ஹைட்ரோசயனிக் அமில நச்சு காணப்படுகிறது.

மாடு ஆடு போன்ற அசைபோடும் பிராணிகள் இவ்வகையான தாவரங்களை அதிகம் உண்பதால், இந்த நச்சுத்தன்மையினால் அதிகம் பாதிக்கப்படுகின்றன. பொதுவாக தாவரங்களில் 200 பிபிஎம் என்ற அளவிற்கு மேல் இந்த நச்சு இருப்பின், அவற்றை உண்ணும் கால்நடைகள் பாதிப்பிற்கு உள்ளாக நேரிடும். இந்த நச்சுப்பொருள் கலந்த தீவனத்தை உண்ட கால்நடைகளில், 15

நிமிடங்களிலேயே நோய் அறிகுறிகள் காணப்படும்.

மிரளுதல், வாயிலிருந்து அதிக எச்சில் மற்றும் நுரை தள்ளுதல், கண்களில் நீர் வடிதல், நரம்புத்தளர்ச்சி, வலிப்பு, மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் காணப்படும். வயிறு உப்புசம் மற்றும் கண்கள் சிவந்தும் காணப்படும். அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டால், தாமதிக்காமல் கால்நடை உதவி மருத்துவரை அணுகி, சிகிச்சை அளித்து கால்நடைகளை கண்டிப்பாக காப்பாற்றலாம். எக்காரணத்தை கொண்டும் வாடிய மற்றும் காய்ந்த இளம் சோளப்பயிர்களை, கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கக்கூடாது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பசு வளர்ப்போருக்கு அனிமல் ஹெல்த் கார்டு வழங்க முடிவு

மத்திய அரசின் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் சார்பில் நாடு முழுவதும் உள்ள பசுமாடுகள் குறித்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக பசு மாடு வளர்ப்பவர்களுக்கு கால்நடை பராமரிப்பு துறையின் மூலமாக ஹெல்த் கார்டு வழங்கப்படவுள்ளது. இந்த, கார்டில் பசுவின் வகை, சினை ஊசி போட்ட விவரங்கள், அடையாள எண், அதன் குட்டி, அது குறித்த விவரங்கள் உள்ளிட்டவை இருக்கும். இந்த ஹெல்த் கார்டு கால்நடை உரிமையாளரிடம் வழங்கப்படும். இது குறித்த விவரங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படும். இதன் மூலமாக மத்திய அரசு சம்மந்தப்பட்ட கால்நடை குறித்த தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்.

கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களாக ஹெல்த் கார்டு கொடுக்க தேவையான நடவடிக்கையை கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். விரைவில், ஹெல்த் கார்டு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர். இதனால், மாடுகளை வேறு ஒரு மருத்துவர் ஆய்வு செய்தாலும் அதற்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியும் என கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வேளாண் இயந்திர கருவிகள் வாடகை மையம் அமைக்க மானியம்

‘இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைக்கும் திட்டத்தின்’ மூலம் வாடகை மையம் அமைத்திட விண்ணப்பிக்கலாம் என திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: திருச்சி மாவட்டத்தில் வேளாண்மைக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. வேளாண் கருவிகள் ஆதிதிராவிடர் பழங்குடியினர் சிறு குறு மற்றும் மகளிர் விவசாயி களுக்கு 50 சதவீதம் இதர பிரிவு விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது அரசு நிர்ணயித் துள்ள தொகை இவற்றில் எது குறைவாக உள்ளதோ அது மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பெறக்கூடிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சிறு குறு விவசாயிகள் மானியத்தில் வாங்கி தங்கள் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையில் நியாயமான வாடகைக்கு விடும் வகையில் வாடகை மையம் அமைக்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்க விருப்பமுள்ள அந்தநல்லூர் மணிகண்டம் திருவெறும்பூர் ஸ்ரீரங்கம் மணப்பாறை வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் அல்லது விவசாய குழுக்கள் எண்-2 ஜெயில் கார்னர் திருச்சி-620020 என்ற முகவரியிலுள்ள உதவி செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலும் முசிறி தொட்டியம் தா.பேட்டை துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் அல்லது விவசாய குழுக்கள் எண்-18 கண்ணதாசன் தெரு முசிறி 621211 என்ற முகவரியிலுள்ள உதவி செயற் பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலத்திலும் லால்குடி புள்ளம்பாடி மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் அல்லது விவசாய குழுக்கள் லூர்து இல்லம் 451/2 8வது குறுக்குத்தெரு காமராஜர் நகர் தெற்கு லால்குடி-621601 என்ற முகவரியிலுள்ள உதவி செயற்பொறியாளார் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலும் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். வேளாண் இயந்திர கருவிகளான உழுவை இயந்திரம் ரூ.610 பவர்டில்லர் ரூ.340 உழுவை இயந்திரம்

**வேளாண்மை விரிவாக்க மையத்தில் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

பயிர் காப்பீடு செய்து கொள்ள, பர்கூர் வட்டார விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பர்கூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில், பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் பர்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று பேசியதாவது: காரிப் பருவத்தில் இயற்கை இடர்பாடுகளால், பயிர் இழப்புக்கான புதிய பயிர் காப்பீட்டுத் திட்டமான பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா திட்டம் மூலம், உரிய பிரிமியம் செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம். அறிவிக்கை செய்யப்பட்ட வருவாய் கிராமங்கள், குறுவட்ட அளவிலான பயிர்களை பியிரிட்ட விவசாயிகள் இத்திட்டத்தில் சேர தகுதியானவர்கள்.

மேலும் குத்தகை செய்யும் விவசாயிகள், பயிர் கடன் பெற்ற மற்றும் பெறாத விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பிரிமியத் தொகையுடன் செலுத்தி பயன்பெறலாம். இதற்கான கடைசி நாளாக நெல்லுக்கு ஜூலை 31ம் தேதி, இதர வேளாண் பயிர்களுக்கு ஆகஸ்ட் 15ம் தேதி ஆகும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் குமரேசன், உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தன் மற்றும் பர்கூர் வட்டாரத் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**புதன்சந்தையில் மாடுகள் விலை சரிவு**

வியாபாரிகள் வருகை குறைந்ததால், புதன்சந்தையில் மாடுகளின் விலை சரிந்தது. நாமக்கல் மாவட்டம், புதன்சந்தையில் வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு முதல், செவ்வாய் மதியம் வரை மாட்டுச்சந்தை கூடுகிறது. மாடுகளை வாங்க கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலத்தில் இருந்தும் கோவை, பொள்ளாச்சி, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வருகின்றனர்.

நேற்று கூடிய மாட்டுச்சந்தையில் கேரளா, கர்நாடகம் பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து குறைந்த அளவிலான வியாபாரிகள் வந்திருந்தனர். சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து அதிகளவில் மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. இதனால் சந்தையில் மாடுகளின் விலை சரிந்தது. கடந்த வாரம் ரூ.11 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு, இந்த வாரம் ரூ.9 ஆயிரத்திற்கும், ரூ.37 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு ரூ.35 ஆயிரத்திற்கும், ரூ.5 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி ரூ.4 ஆயிரத்திற்கும் விற்கப்பட்டது.

## கெலமங்கலம் அருகே பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாம்

கெலமங்கலம் அருகே குந்துமாரணப்பள்ளி மற்றும் அக்கொண்டப்பள்ளி கிராமங்களில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கெலமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகம்(பொ) தலைமை வகித்து, பயிர் வாரியாக பிரியம் செலுத்தி காப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அப்போது, அவர் பேசுகையில், இந்த திட்டத்தில் விதை விதைக்க இயலாமை, விதைப்பு வளர்ச்சி பொய்த்து போகுதல், அறுவடைக்கு பிறகு ஏற்படும் இழப்பு போன்ற அனைத்து இனங்களுக்கும் பயிர் காப்பீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் பயிர் கடன் பெற்ற விவசாயிகள் இந்த திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். பயிர் கடன் பெறாத விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேரலாம், காரிப் பருவத்தில் மானாவாரி பயிர்கள், ராகி, துவரை, நிலக்கடலை மற்றும் இறவை நெல்லுக்கும் இத்திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயிர்களுக்கு காரிப் பருவத்தில் காப்பீடு தொகையில் 2 சதவீதம் பிரிமிய தொகை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக செலுத்தலாம். மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை அலுவலகத்தை அணுகுமாறும் கேட்டுக்கொண்டார். முகாமில் வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரி, உதவி வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜலகண்டாபுரத்தில் 36 டன் கொப்பரை ரூ.30 லட்சத்துக்கு ஏலம்

ஜலகண்டாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில், 36 டன் கொப்பரை ரூ.30 லட்சத்துக்கு ஏலம் போனது.
சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு நேற்று கொப்பரை ஏலம் நடந்தது. இதில், ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், 35,690 கிலோ கொப்பரையை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். கொப்பரை தரத்திற்கு தகுந்தாற்போல், குறைந்தபட்சம் ஒரு கிலோ ரூ.83 வரையும், அதிகபட்சமாக ரூ.92.25 வரையும் ஏலம் போனது. இதன் மூலம் ரூ.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. சென்ற வாரத்தை விட இந்த வாரம், சராசரியாக கிலோவுக்கு ரூ.1 அதிகம் கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## நாமகிரிப்பேட்டையில் 1,270 மூட்டை மஞ்சள் ரூ.62 லட்சத்துக்கு ஏலம்

நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க ஏலத்தில், 1,270 மூட்டை மஞ்சள் ரூ.62 லட்சத்துக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. நேற்று நடந்த ஏலத்தில் ஈரோடு, சேலம், நாமகிரிப்பேட்டை, ஆத்தூர், தம்மம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த

விவசாயிகள், விரலி மஞ்சள் 770 மூட்டை, கிழங்கு மஞ்சள் 430 மூட்டை மற்றும் பனங்காளி மஞ்சள் 70 மூட்டைகள் என மொத்தம் 1270 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

சேலம், ஈரோடு, நாமக்கல் மற்றம் திருப்பூரை சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்துகொண்டனர். ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் ரூ.10,199 க்கும், குறைந்தபட்சம் ரூ.7,779 க்கும். கிழங்கு (உருண்டை) மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் ரூ.8,299 க்கும், குறைந்தபட்சம் ₹ 7,029 க்கும், பனங்காலி மஞ்சள் அதிகபட்சம் ரூ.22 ஆயிரத்து 893க்கும், குறைந்தபட்சம் ரூ.12 ஆயிரத்து 793க்கும் விற்பனையானது. ஒட்டு மொத்தமாக 1,270 மூட்டை மஞ்சள், ரூ.62 லட்சத்துக்கு விற்பனையானது.